**சார்பு நீதிமன்றம், மேலூர்**
நாள் *:12.08.2024*
பி.வா.சா.*4* –மீனாட்சி *w/o* பெரியாண்டவர், மேலூர், ஆலம்பட்டி
*O.S No. 26/2019:*
*(*சாட்சி மனுவின் பேரில் வாதி தரப்பினால் நீதிமன்றத்திற்கு *IA No.3/24, IA No.4/24* அனுமதிக்கப்பட்டு, சாட்சி வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில்விசாரணை செய்யப்படுகிறார்*.)*
வாதி தரப்பில் விசாரணை *:*

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. நான் தான் அழைப்பாணையை பெற்றேன். அதில் உள்ள கைரேகை என்னுடையது தான் என்று சாட்சி அழைப்பாணை பார்வையிட்டு குறிப்பிடுகிறார். நான் கைரேகை இடுவது தான் வழக்கம் என்றால் சரிதான். எனக்கு எழுத, படிக்க தெரியாது. நான் கைரேகை தான் எப்போதும் வைப்பேன், கையெழுத்திடுவது கிடையாது. பெரியதம்பி *1*ம் வாதி என் உடன்பிறந்த அண்ணன். *1*ம் பிரதிவாதி முத்துக்கருப்பன் என்னுடைய அப்பா ஆவார். எங்கள் குடும்ப தொழில் குத்தகைக்கு மாங்காய் எடுத்து வியாபாரம் செய்வது என்றால் என் அப்பாவுடைய தொழில் ஆகும். என் தந்தைக்கு குத்தகைக்கு மாங்காய் எடுத்து வியாபாரம் செய்வது வழக்கம் என்றால் சரிதான். பட்டுரில் என் குடும்பத்திற்கு சுமார் *4* ஏக்கர் பாத்தியம் என்றால் தெரியவில்லை. வழக்கு சொத்துக்களானது பூர்வீக சொத்துக்கள் என்றால் சரியல்ல, என் அப்பாவினுடைய சுயசம்பாத்திய சொத்துக்கள் ஆகும். நான் தவறாக சொல்கிறேன் என்றும், வழக்கு சொத்துக்கள் எல்லாம் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சாட்சி தெரியாது என்று கூறிவிட்டு என் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்று கூறுகிறார். என் தந்தை எப்பொழுது காலமானார் என்று தெரியவில்லை, அவர் காலமாகி சுமார் *7- 8* ஆண்டுகள் ஆகிறது. வழக்கு சொத்துக்களில் மாந்தோப்பு இருக்கிறது என்றால் தெரியவில்லை. வழக்கு சொத்துக்களில் எனக்கு பாகம் இல்லை என்றால் என் தந்தை எங்களை நன்கு திருமணம் செய்துமுடித்துக் கொடுத்ததால் எங்களுக்கு பாகம் வேண்டாம். இருந்தாலும் வேண்டாம். என் தந்தை எனக்கு எதுவும்

சொத்து எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை. ஆனால் நன்றாக நகை செய்து கல்யாணம் செய்து கொடுத்தார். பட்டுரில் என் வீடு ஆலம்பட்டியில் இருக்கிறது, அது சுமார் *1* கி.மீ தொலைவு பட்டுரில் இருந்து இருக்குமா என்றால் தெரியவில்லை. வள்ளியாயி என்பவர் என்னுடைய தாயார் ஆவார். வழக்கு சொத்துக்களில் என் தாயார் வழிச்சொத்துக்களும் உள்ளடங்கும் என்றால் அதுபற்றி தெரியவில்லை. என் வழக்கறிஞரின் வேண்டுகோளிற்கிணங்க நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*( 2* முதல் *5* பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது*)*

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஓம்.M.சாமுண்டீஸ்வரி பிரபா
சார்பு நீதிபதி,
மேலூர்